உத்தியோகஸ்தர்களையும் மலபாருக்கு அனுப்பினாலும்கூட, இன்னும் மலையாள உத்தியோகஸ்தர்கள் பாக்கி இருப்பார்கள். எனவே மலபாரில் இருக்கும் எல்லா தமிழ் உத்தியோகஸ்தர்களும் தமிழ் நாட்டுக்கு வந்து விடுவார்கள்.

Cattle-farms under the Second Five-Year Plan

* 84 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of cattle-farms proposed to be opened under the Second Five-Year Plan; and

(*b*) the places where the farms are to be located?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) One, Sir.

(*b*) In Ramanathapuram district. The Palayar forest area near Karaikudi in Ramanathapuram has been fixed tentatively.

SRI M. KALYANASUNDARAM: சர்க்காரே நேராக நடத்தும் பண்ணைகளோடுகூட தனி நபர்கள் நடத்தும் பண்ணைகளுக்கு உதவி செய்ய திட்டம் உண்டா? இப்பொழுது தனி நபர்கள் நடத்தும் பண்ணைக்கு சர்க்கார் உதவி செய்துகொண்டிருக்கிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தனி நபர்கள் நடத்தும் பண்ணைகள் சில இடங்களில் இருக்கின்றன. அவைகளுக்கு சர்க்கார் உதவி செய்து வருகிறார்கள். இன்னும் யாராகிலும் புதிதாக பண்ணை நடத்துவதற்கு முன்வந்து சர்க்கார் உதவி கேட்டால், அதையும் பரிசிலனை செய்யலாம்.

SRI M. KALYANASUNDARAM: இப்பொழுது இருக்கும் கால்நடைப் பண்ணைகளில் மாடுகள் மட்டும்தான் வைக்கப்பட்டிருக்கின்றனவா? ஆடுகளுக்காக தனி கால்நடைப் பண்ணை ஆரம்பிப்பதற்கு சர்க்கார் திட்டம் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்பொழுது இருக்கும் கால்நடைப் பண்ணைகளில் ஆடுகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆடுகளுக்கு என்று தனியாக சேலம் ஜில்லாவில் ஆத்தூர் தாலுகாவில் ஒரு பண்ணை வைக்கலாம் என்பதைப் பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

SRI V. BALAKRISHNAN: Was a proposal for the opening of a cattle-farm in Tiruchirappalli district mooted by the officers of the technical department concerned and is it a fact that the proposal did not fructify on account of the difference of opinion between Congressmen with regard to the site for locating the farm?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not know anything about what the hon. Member is referring to. But there is a cattle-farm in Pudukottai, which is now part of the Tiruchirappalli district. There is a proposal to expand the cattle-farm so that we can concentrate on some breeds of cattle like the Kangayam breed. We had been examining a suitable area that could be taken up for this expansion and we took up one forest area. But we found that water was not available in that area. Then another area was suggested. But about that, there is a difference of opinion between the Animal Husbandry Department and the Forest Department. I propose to have a discussion with both the departments so that we could arrive at some decision.

SRI G. GOVINDAN : யாதவர்கள் ஜாஸ்தியாக இருக்கும் இடங்களில் தனி ஆட்டுப் பண்ணைகள் வைப்பது நல்லது. ராமனாதபுரம் ஜில்லாவில் யாதவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆதலால், அங்கு ஒரு ஆட்டுப் பண்ணை வைப்பதற்கு சர்க்கார் யோசனை செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : யாதவர்கள் எந்தெந்த ஜில்லாக்களில் அதிகமாக இருக்கிறார்கள் என்ற ஜனத்தொகை கணக்கு விவரங்கள் என்னிடமில்லை. ஆகையினால் எல்லா விஷயங்களையும் நன்கு ஆலோசித்து, ஆட்டுப் பண்ணை வைப்பதற்கு எந்த இடம் தகுதியானது என்று கண்டு அதற்கு மேல் அரசாங்கம் கவனம் செலுத்தும்.

SRI M. KALYANASUNDARAM : தனி நபர்கள் நடத்தும் பண்ணைக்கு சர்க்கார் நிதி உதவி அளிப்பதாகக் கனம் மந்திரி அவர்கள் கூறினார்கள். என்னென்ன நிபந்தனைகளின் பேரில் அந்த மாதிரி உதவி அளிக்கப் படுகிறது ? அப்படி சர்க்கார் உதவி பெறும் பண்ணைகளுக்கு கால்நடைகளை நியாயமான விலைக்கு விற்கவேண்டுமென்று ஒரு நிபந்தனையும் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தனி நபர் கால்நடை பண்ணைகளுக்கு சர்க்கார் உதவி அளிக்கும்பொழுது, ஒரு குறிப்பிட்ட விலைக்கு கால்நடைகளை விற்கவேண்டுமென்ற நிபந்தனையும் உண்டு. இம் மாதிரி சர்க்கார் உதவிபெறும் பண்ணைகளுக்கு என்னென்ன நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன என்ற விபரங்கள் இப்பொழுது என்னிடமில்லை. தனிக் கேள்வி கேட்டால் சொல்லுகிறேன்.

SRI P. SELVARAJ : May I know whether the purpose of the cattle-farm is to salvage the dry cows and rejuvenate them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The main purpose of a cattle-farm is to improve the breed of cattle.

SRI P. CHELLATHURAI : ராமனாதபுரம் ஜில்லாவில் கால்நடைப் பண்ணை நடத்துவதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டதா ? அந்த இடத்தின் பெயர் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : காரைக்குடி சமீபத்தில் பாலையார் காட்டுப் பிராந்தியத்தில் ஒரு கால்நடைப் பண்ணை ஆரம்பிப்பது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறது என்று நான் முன்பே ஆங்கிலத்தில் பதில் சொன்னேன்.

SRI V. C. PALANISWAMI GOUNDER : Are the Government aware of the fact that the development of the Kangayam breed in Hosur is not very encouraging, and on that score will the Government see that the breed is brought down elsewhere where the atmosphere for its breeding is congenial?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Apart from the suitability of having the Kangayam breed concentrated in Hosur, it is the idea of the Government that they must concentrate on the Sindhi breed in the Hosur farm. Therefore it is proposed to have, as the hon. Member suggests, the Kangayam breed concentrated either in the Pudukottai farm or in the proposed cattle farm in the Ramanathapuram district.

SRI M. D. THIYAGARAJA PILLAI : முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கால்நடை ஆஸ்பத்திரிகள் இருக்குமிடங்களில் கோழிப்பண்ணைகள் வைக்கப்படாததால், அநேக இடங்களில் ஜாதிக்கோழிகள் சீக்கு வந்து அழிந்துபோய்விட்டாதாகத் தெரிகிறது. ஆகையால் எங்கெங்கு கால்நடை

14th August 1956]

ஆஸ்பத்திரிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஒரு சிறு கோழிப் பண்ணை யூனிட் வைத்து அதை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய திட்டத்தை அரசாங்கம் கொண்டுவருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கால்நடை ஆஸ்பத்திரிகள் இருக்குமிடங்களெல்லாம் கோழிப் பண்ணைகள் வைப்பது சாத்தியம் இல்லாமல் இருக்கலாம். ஆகையால் கோழிகளுக்கு வியாதி வராமல் தடுப்பதிலும் அரசாங்கம் நடத்தும் பண்ணை தவிர தனி நபர்கள் கோழிப்பண்ணை அமைப்பதற்கு முன்வந்தால் அவர்களுக்கு ஆதரவு கொடுப்பதிலும், அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

SRI M. KALYANASUNDARAM : தனி நபர்கள் நடத்தும் பண்ணைகளுக்கு சர்க்கார் உதவி அளித்தால், அவர்கள் கால்நடைகளை ஒரு குறிப்பிட்ட விலைக்கு விற்கவேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். நான் அறிந்தவரை ஒரே ஒரு தனி நபர் பண்ணைக்குத் தான், அதாவது பழையகோட்டை பட்டையக்காரர் பண்ணைக்குத் தான் சர்க்கார் உதவி அளிக்கிறார்கள். ஆனால் அந்தப் பண்ணையில் தான் மாடுகள் அதிகமான விலைக்கு விற்கப்படுகின்றன. சர்க்கார் நிர்ணயித்திருக்கும் விலைக்கே அங்கு மாடுகள் விற்கப்படுகின்றனவா என்பதை எப்பொழுதாவது அரசாங்கம் பரிசீலனை செய்தது உண்டா ? இல்லையென்றால் இனியாவது அதைப் பரிசீலனை செய்து மாடுகளை நியாயமான விலைக்கு விற்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பழையகோட்டை கால்நடைப் பண்ணையை பொறுத்தமட்டில் சர்க்கார் எவ்வளவு கால்நடை கேட்கின்றார்களோ அவைகளை ஒரு குறிப்பிட்ட விலைக்கு விற்கவேண்டுமென்று ஒரு நிபந்தனை வற்புறுத்தப்பட்டு, அமுலில் இருந்து கொண்டு வருகிறது.

SRI V. C. PALANISWAMI GOUNDER : Sir, is the Government aware that the Kangayam breed takes very kindly to places 9–20 a.m. where "Kolukattai" grass grows well? May I ask the Government whether Ramanathapuram and Pudukkottai areas are able to give god fodder of "Kolukattai" grass and on that score the Government propose to rear Kangayam breeds in those localities?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, raising Kangayam breed is undertaken in Coimbatore district by a private firm. It is said that dry areas like Ramanathapuram and Pudukkottai also are quite suitable for raising Kangayam breed.

SRI S. DAIVASIGAMONEY : Sir, I would like to know from the Hon. Minister whether it is not a fact that cattle farms are run by the Government for the purpose of demonstration and teaching how to raise better qualities of cattle to persons like Mr. Palaniswami Goundar who is raising Kangayam bulls and cows, or whether it is the idea of the Government to make money by running cattle farms.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Of course the Government do not make money, and that is our worry too over these cattle farms. It is the primary object of Government that the cattle farms must be an object lesson to the ryots and that ryots should be encouraged and instructed to have better breeds.

[14th August 1956

Sri S. THINAKARASAMI THEVAR : பழையகோட்டை பட்டையகாரர் நடத்தும் கால்நடைப் பண்ணை விசேஷமாக இருப்பதற்குக் காரணம் அவர் அங்கு நூற்றுக் கணக்கான ஏக்கரா நிலங்களில் கொழுக்கட்டை புல்லை விசேஷமாக வளர்த்து மாட்டுக்கு தீவனமாகப் போடுவதுதான். ஆகவே, கொழுக்கட்டைப் புல்லை மாகாணத்தின் இதர பாகங்களில் எங்கெங்கு உற்பத்தி செய்யமுடியுமோ அங்கெல்லாம் சர்க்கார் செலவில் உற்பத்தி செய்து, ஆங்காங்கு கால்நடைப் பண்ணைகளை ஆரம்பிப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கொழுச்கட்டை புல் மாத்திரம் காரணமல்ல. பூமியினுடைய சத்தும் கவனிக்கப்படவேண்டும். கொழுக்கட்டைப் புல்லைத் தவிர்த்து, அந்நிய நாடுகளிலிருந்தும் பல்வித விதைகளை வரவழைத்து 'எக்ஸ்பெரிமெண்ட்' செய்து பார்க்கிறோம். பூமியின் வளத்திற்குத் தகுந்தாற்போல் எந்தெந்த வகையான புல் எங்கெங்கு வளருமென்று பார்த்து அதை வளர்ப்பதற்கு கவனம் செலுத்தப் பட்டு வருகிறது.

Sri V. BALAKRISHNAN : Is the Hon. Minister aware that Pudukkottai is able to produce fertile mates equal to the virility of Kangayam bulls, and will the Hon. Minister kindly see that the operation is profusely done at Pudukkotai rather than in the area of Mr. Palaniswami Gounder?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I entirely agree with the hon. Member.

Sri S. R. ARUMUGAM : கோயமுத்தூர் ஜில்லாவில் சூலூர் பிர்க்காவில் கலங்கல் என்னும் இடத்தில் குறும்பாடு வளர்க்கும் குடும்பங்கள் 120க்கு மேல் இருக்கின்றன. அவர்களுடைய ஆடுகளை புதிய முறையில் அபிவிருத்தி செய்ய முடியாமல் பழையபடியே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அபிவிருத்தி அடையாத ரகங்களாகவே இன்னும் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அங்குள்ள குறும்பாடு மேய்ப்பவர்களை சேலத்திலுள்ள கால்நடைப் பண்ணைக்கு அழைத்துக் கொண்டுபோய், அவர்களுடைய ஆடுகளையும் நல்ல ரகங்களாக வளர்ப்பதற்கான முறையில் அவர்களுக்குப் பயிற்சிகொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சேலம் ஜில்லாவிலே கால்நடைப் பண்ணையை வைப்பதன் முக்கியமான நோக்கம் சேலம் ஜில்லாவில் மேட்டூரிலிருந்து தண்ணீர் கிடைப்பதைக் கொண்டு மேச்சேரி ரகத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் என்பது. அதோடு வேறு என்னென்ன வகையிலே கவனம் செலுத்தமுடியுமோ அப்படிச் செய்யலாம்.

Sri V. MUTHU : மதுரை ஜில்லாவில் பெரிய குளம் தாலூகாவில் வருஷநாடு முதலிய சில பகுதிகளில் ஆடு மாடு மேய்ச்சலுக்குத் தகுதியான இடங்களிருப்பதால், அவ்விடத்தில் மாட்டுப் பண்ணையை வைப்பதற்கு சர்க்கார் ஆலோசிப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எல்லா ஜில்லாக்களிலும் மாட்டுப்பண்ணையையும் ஆட்டுப் பண்ணையையும் வைக்கமுடியாது. மதுரை ஜில்லாவைப் பொறுத்தமட்டில் இரண்டு தனி நபர்கள் சேர்ந்து பண்ணைகள் வைத்து நடத்துவதினால் மதுரை ஜில்லாவில் வைப்பதற்குப் பதிலாக இராமநாதபுரம் ஜில்லாவில் வைக்கலாமென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

Sri K. VINAYAKAM : கொழுக்கட்டைப் புல் என்றால் என்ன ? அதற்கும் தோசைப் புல்லுக்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் உதகமண்டலத்தில் நடந்த பொறுக்குக் கமிட்டிக் கூட்டத்திற்கு வந்திருக்கிறார். ஆனால் அந்தப் பக்கத்தில் பல இடங்களில்

14th August 1956]

கொழுக்கட்டைப்புல் வளர்த்திருப்பதைப் பார்க்கவில்லையென்று நினைக்கிறேன். அடுத்த முறை உதகமண்டலத்திற்கு வரும்போது என்னுடன் வந்தால் அங்கே கொழுக்கட்டைப்புல் எவ்வளவு நன்றாக வளருகிறது என்பதை நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

Period of training in Veterinary College

* 85 Q.—Sri T. C. NARAYANAN NAMBIAR (on behalf of Sri V. R. Krishna Ayyar) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether Government have any emergency scheme to cut short the period of training in Veterinary College?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No Sir.

National Extension Scheme for Gingee.

* 86 Q.—Sri K. ARANGANATHAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state when the National Extension Scheme will be introduced in Gingee?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : It cannot be stated now when the National Extension Service Scheme will be launched in the Gingee area. I may, however, add that the scheme will be extended by stages so as to cover the entire State before the end of the Second Five-Year Plan.

Sri K. ARANGANATHAN : கனம் அமைச்சரவர்கள் செஞ்சிக்கு வந்திருந்தபோது, அங்கிருக்கக் கூடிய மக்கள் அத்தனை பேரும் தேசிய வளர்ச்சித் திட்டத்தை எந்த முறையில் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதையும் அவர்களுடைய சலியாத உழைப்பையும் நேரில் பார்த்தார்கள். பின் தங்கிய பிரதேசத்தை மற்ற பிரதேசங்களுக்குச் சமமாக சர்க்கார் கொண்டுவரவேண்டுமென்று வகுக்கும் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வதற்கு அங்குள்ள மக்கள் தயாராக இருக்கிறார்கள், அவர்களுக்கு வாய்ப்புக்கொடுத்தால் போதும் என்று சொன்னபோது மிகவும் ரசித்தார். ஆகவே, செஞ்சி தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தில் சேர்க்கப்படுமா என்று கேட்கிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : தென்னாற்காடு ஜில்லாவில் தேசீய வளர்ச்சித்திட்டப் பகுதியை அடுத்தபடியாக பொறுக்கியெடுக்க முடிவு செய்வதற்கு முன்பு செஞ்சியில் கனம் அங்கத்தினருடன் கண்டதை நான் மறக்கமாட்டேன்.

Construction of an overbridge across the railway line at Tambaram

* 87 Q.—Sri K. ARANGANATHAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken to construct an overbridge across the railway line at Tambaram on Madras-Dindigul Road?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The proposal for the provision of an overbridge in lieu of the level crossing near Tambaram on the Madras-Dindigul Road was recommended to the Government of India along with certain other cases. The Govrnment of India have since called for plans and estimates in respect of this and five other road-rail crossings on National Highways